

யாழ்ப்பாணம் - மாதகல்

அமரர். உயர்திரு.

# குமாரசாமி சுப்பிரமணியம்

அவர்களின்

# நினைவு மலர்

19-06-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் – மாதகலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டவரும்
உயர் சைவ வேளாண் குலதிலகருமாகிய

அமரர். உயர்திரு.

# குமாரசாமி சுப்பிரமணியம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

19-06-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் அன்புத் தெய்வமாகவும்
ஒளி விளக்காகவும் இருந்து எங்கள்
நல்வாழ்விற்காகத் தன்னை அர்ப்பணித்து
அணையாத ஜோதியாக எங்கள் மனதில்
குடிகொண்டு இன்று வானுறையும்
தெய்வமாகி விட்ட எங்கள்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களுக்கு
இப் மலரினை கண்ணீருடன் கலந்து
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகன பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும்மருவி நின்றகலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தாள் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோரிடை யூறெனக்குண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே! உலாப்பிலாவென்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தேளிவளர்ப்பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனோடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழார்கள்
திசை யனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை, சத்திச் சரவண
முத்திக் கொரு, வித்துக் குருபர - னெனவோதும்
முக்கட் பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்க்கத்தமரரு - அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மற்றைதப்பொழுதொரு
பட்டப் பகல் வட்டத் திகிரியி இலிரவாக
பத்தற்க்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயண் மெச்சித் தரு பொருள்
பட்சத்துடன் ரட்சித் தருளு தொருநாளே
தித்தித்திசை யொக்கப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கா டிக்கழகொடு கூழகாடத்
திக்குப்பரி வட்டக் கலைகொடு
சித்ரப்பவு ரிக்குத் ரிக்குத்திகுதிகு
திக்குத்திகு திக்குத்திரிகட மெனவோதும்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென முது கூகை
கொட்புற்றெழ நட்பற்ற வுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குல கிரி
குத்துப்பட வொற்றிப் பொரவல பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர். திரு. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் வடமேற்கில் அமைந்துள்ளது மாதகல். இது வரலாற்றுக் காலத்திலிருந்து பெயர்பெற்று விளங்குகிறது. இலங்கைக்கு வெள்ளரச மரக்கிளையை கொண்டு வந்த பிக்குனி சங்கமித்திரை சம்பில்துறை முகத்தில் வந்திறங்கியமை காரணமாக மகாவம்சம் யம்புக்கோல பட்டணம் என்று விளம்பி நிற்கிறது. இன்று சம்பில்துறையில் சங்கமித்திதை சிலை நிறுவப்பட்டு தென்னிலங்கை மக்கள் தரசிக்குமிட மாக மிளர்கிறது.

இக்கிராமத்தில் கனகராச முதலியார் வம்சத்தில் உதித்த வேளாண் குலத்தில் இராமசாமியாரின் மகனாக குமரசாமி பிறந்தார் இறைபக்தியும் தயாள சிந்தையும் உள்ள குமாரசாமி அதேயூரைச் சேர்ந்த நல்லமுத்து அவர்களை வாழ்க்கைத் துணையாக அமைத்துக் கொண்டார். இல்லறம் நல்லறமாக நடந்துவரும் காலையில் இவர்கட்கு நடராசா, செல்லம்மா, சீதாங்கனி, சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோர் மக்கட் செல்வங்களாக கிடைத்தனர்.

அமரர் சுப்பிரமணியம் 01-12-1928ஆம் ஆண்டு பிறந்தார். பிள்ளைப் பருவத்தில் துள்ளி விளையாடி பெற்றோரின் அயலவர்களின் மனங்களை வென்றார். இவர் ஆரம்பக்கல்வியை யா/ மாதகல் விக்கினேஸ்வராக் கல்லூரியில் கற்று பின்னர் இளைஞராக வேலையில் அமர்ந்தார். இவர் நிலஅளவைத்திணைக்களத்தில் 1959இல் கங்காணியா ராக நியமனம் பெற்று தன்னுடைய மேலதிகாரியின் அன்புக்கு பாத்திரமாக சேவையாற்றினார் இவரது உத்தியோக வாழ்வு குருநாகல், புத்தளம், பரந்தன், கல்கமுவ என்ற நகர காடுகளை கொண்டதாக அமைந்தது இவர் 1983 வரை சேவையாற்றி நாட்டுநிலை காரணமாக தனது சேவையை 55 வயதுடன் பூர்த்தி செய்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது வாழ்க்கைத் துணையாக மாதகல் மேற்கில் சைவ வேளாண் உயர் குடியில் பிறந்த விநாசித்தம்பிக்கும் அவர் தம் பாரியார் மரகதத்திற்கும் பிறந்த செல்வராணியை 1958 கார்த்திகை முப்பதில் கைப்பிடித்தார் இவர்கள் வாழ்க்கையில் இல்லறத்தை நல்லறமாக வந்தாரை வரவேற்கும் பண்புள்ளதாக அமைத்துக் கொண்டனர். இதன் பயனாக மூத்தமகளாக சாந்தினி 1959இல் பிறந்தார் மூத்தமகளை வயது வந்ததும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. விவேகானந்தன் (அமரர்) அவர்களுக்கு திருமண பந்தத்தில் இணைத்து விட்டார். இதன் பயனாக பேரப்பிள்ளையைக் கண்டு மனம் குதூகலித்தார். இவருக்கு இரண்டாவது மகளாக சறோஜினி 1961இல் கிடைத்தார். இவரையும் உரிய வயதில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் என்பவருக்கு திருமாங்கல்யம் சூட்டி திருமணப் பந்தத்தில் சேர்த்தார். மகள் சறோஜினியின் பிள்ளைகளையும் கண்டு பூரிப்படைந்தார்.

அமரர். சுப்பிரமணியம் அவர்களின் மூன்றாவது பிள்ளையாக 1964இல் ரவீந்திரன் பிறந்தார். இப்பிள்ளையின் வாழ்வு இடைநடுவில் அகாலமரணமாக 1979இல் முடிவடைந்தது. இவர் தம் நான்காவது மகளாக மாலினி 1966இல் பிறந்தார் இவர் மாதகலைச் சேர்ந்த வயித்திலிங்கம் சண்முகசுந்தரம் என்பவரை மணந்து கொண்டார். இவர்களின் பேரப்பிள்ளைகளுடன் தனது இறுதிக்காலத்தில் வாழ்ந்து வந்தார்.

அமரர் சுப்பிரமணியம் அவர்களின் ஐந்தாவது பிள்ளையாக 1968இல் புலேந்திரன் உதித்தார். இளமைக் காலத்தில் சிறந்த கலைஞனாக விளங்கி நல்ல ஆர்ட்டிஸ்ராக விளங்கினார். புலேந்திரனின் படங்கள் பலரின் மனங்களைக் கொள்ளை கொண்டன. இவர் தம்மகன் புலேந்திரனுக்கு பருத்தித்துறையில் பெண் கொண்டார் புனிதவதியை தன்மருமகளாக்கி இன்புற்றார் இவரின் இம்மகன் கனடாவில் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரருக்கு ஆறாவதாக பத்மினி 1968இல் பிறந்தார். உரிய பருவம் வந்ததும் தன் மகளை மீசாலையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவருக்கு உரியமுறைப்படி கொடுத்தார். இவர்கள் வாழ்வு சிறக்க இனிய மக்களைப் பெற்றெடுத்தனர்.

இவருக்கு ஏழாவதாக மகேந்திரன் 1970இல் பிறந்தார் இவர் தம்மகனுக்கு மீசாலையில் பெண் கொண்டார். மகேந்திரன் கௌரி வாழ்க்கை சிறப்புற விளங்கி பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டனர்.

1973இல் எட்டாவது பிள்ளையாக சுரேந்திரன் பிறந்தான் கல்வியில் சிறந்து உயர் கல்வியை பல்கலைக்கழகத்தில் பெற்று பொறியலாளராக பட்டம் பெற்றார். இவர் தம் முயற்சியால் முன்னேறி தொடர்மாடி வீடுகள் கட்டி விற்கும் பணியில் ஈடுபட்டு சிறப்பும் பெயரும் பெற்றார். இவரது கனிஷ்ட புதல்வனுக்கு கற்றனில் கொழும்பில் வாழ்ந்து வந்த பிரசாந்தி என்பவரை வாழ்க்கைப் பந்தத்தில் சேர்த்து வைத்தார். இவர்கள் பிள்ளையைக் கண்டு பூரிப்படைந்தார்.

இவர் தம் வாழ்க்கையில் இறைபக்தியில் சிறந்து விளங்கியவர் கோயில்களில் தேவாரம் ஓதும்போது கணீர் என்ற குரல் மற்றவர்களைக் கவரும் இவர் தம் வாழ்வு சிறப்பாக அமைந்தமையால் தொண்டுகள் பல புரிந்தார். நுணசை முருகன் ஆலயம், மாதகல் பாணாவெட்டியம்மன் ஆலயம், மாதகல் சித்திவிநாயகர் ஆலயம் என்பவற்றின் நற் காரியங்களுக்கு உதவி வழங்கினார். வயது ஏற ஏற வருத்தமும் கூடும் என்பதற்கு அமைய இறுதிக்காலத்தில் நோயினால் பாதிக்கப்பட்டு 20-05-2010 இல் இறைவனடி சேர்ந்தார்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நடராசப் பத்து

மண்ணாதி புதமோடு விண்ணாதி யண்டம் நீ
மறை நான்கி னடிமுடியும் - நீ
மதியம் நீ ரவியும் நீ புனலும் நீ யனலும் நீ
பெண்ணும் நீ யாணும் நீ பல்லுயிர்க்கும் நீ
பிறவும்நீ யொருவனீயே
பேதாதி பேதம்நீ பதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
நண்ணுநற் பொருளும் நீ யிருளும் நீ யொளியும் நீ
நாதனாய் வந்தவனும் நீ
நவில்கின்ற கிரகங்க ளொன்பதும் நீ யிந்த
நானிலந் தந்தவனு நீ
எண்ணரிய சீவகோடிக ளீன்ற என்ன ப்பனே
என் குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிகாமிட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
வசைமுறை பிரமனாடக்
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாத் தண்டைபுலி யுடை யாடக்
குழந்தை முருகேசனாடத்
தானாட வாடுசம் பந்தரிந் திரர்முனிவர்
தனியட்ட பாலராடத்
தகுதும்பை யறுகாட நந்திவா னமாடத்
தாளநெறி மாதராட
யானாட வினையோட வெனைநாடி யிதுவேளை
யிசை விருதொ டாடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 2

கடலென்ற புவிமீதி லலை யென்ற யுருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பிக்
காற்றென்ற மூவாசை யாற்றொணாச் சூழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உண வென்ற விரை தேடி
யோயாமல விரவுபகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதேது யல்லாம
லொரு பயனடைந்திலேனைத்
தடமென்ற விடிகரையிற் பந்தபாசங்க ளெனும்
தாபரம் பின்னலிட்டுத்
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்
இடைநின்று தடை செய்ய வேனென்னு கேளா
திருப்பதுவு மழகாகுமோ?
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பு சூனியமல்ல வைப்பல்ல மாரணம்
பதர்வசிய தம்பலப்
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல
அம்புகுண்டுகள் அலக மொழியு மந்திரமல்ல
வாகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
வரியமோ கனமுமல்லக்
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரமரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்
கோரர்கர் தனவந்திரிபோ கமுனி யிவரெக் லாங்
கூறும் வைத்தியல்ல
எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்க
மிச்சையை யெனக் கருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்துவந் தேனென்றுப லதர முரைக்கவும்
நுழையாத தென்னசெவியோ?
நுட்பநெறியதாத பிள்ளையை பெற்று மதை
நோக்காத தந்தையுண்டோ?
சந்தமும் தஞ்சமென் றடியைப் பிடிக்கவு
தளராத நெஞ்முண்டோ?
சந்ததியிலாத நீயோ?
விந்தைதரு சாலங்க ளுன்னிட மிருக்கதே
வினையொன்று மறிகிலேன்யான்
வேதமுஞ் சாஸ்திரமு முன்னயே புகழுதே
வேடிக்கையி துவல்வோ
இந்தவுல கீரேழு மேனளித் தாய்சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சையில்லா போதும்
வாலாய மாய்க்கோயி கற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதும்
மொழியெதுகை மோனையில் லாமலே பாடினும்
மூர்கனேன் மூடனேனும்
மோசமே செய்யினுந் தேசமேகவரினும்
முழுக்காமியே யாயினுந்
பழியெனக் கல்லவே தாய் தந்தை யர்க்கலோ
பார்த்தவவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைகொளப் பாதியுட லீந்த நீ
பாலனை காக்கொணாதோ
எழில் பெருகு மண்டலங்களிகைவா யமைத்த நீ
பாலனை காக்கொணாதோ
ஈசனேசிவகாமி நேசனே எனையின்ற
தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னை தந்தையர்களெனையீன்றதற் கழுவேனோ?
வறிவற்றதற் கழுவெனோ?
அல்லாமல் நான் முகன் தன்னைநொந் தழுவேனோ?
வாசை மூன்றுக் கழுவெனோ?
முற்பிறப்பென்னவழனை செய்தனென் றழுவெனோ?
மூடருநவுக் கழுவெனோ?
முன்னலென் வினைவந்து மூவுமென் நழுவெனோ?
மூத்தியை நினைந் தழுவேனோ?
முத்தியை நினைந் தழுவேனோ?
தனைநொந் தழுவெனோ வுன்னை நொந்தழுவெனோ?
தரித்திர திசைக்கழுவெனோ?
தாரணியி லுன்றருள் பெற்ற பெரியோர்களைத்
தழுவாததற் கழுவெனோ?
இன்னுமெப் பிறவி வருமென்றழுவெ னோஅவைக
ளெல்லா முரைக்கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனை யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாமரங் ளிற்பூபிஞ் சறுத் தேனோ?
கனியர்கள் பழிகொண்டனோ?
கடனென்று பொருள் பறித் தேவயிறெரித்தெனோ?
தந்தபொருளிலையென்று நான்
தானென்ற கோபமொடு கொலை களவு செய்தேனோ?
தபசிகளை யேசினேனோ?
வாயார நின்று பலபொய் சொன்னேனோ?
வந்தவரை மரியாதை செய்யா தடித் தேனோ?
வழக்கிலோரஞ் சொன்னேனோ?
ஈயாதலோபி யேயாலுமென் பிழைகள்
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 8

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தாரணியை யாண்டு மென்ன
சேயர்களிருந் தென்ன குருவாய்த் திரிந் தென்ன
சீடர்களிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது முழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான் தடுக்க
வுதவுமொ விவையெலாஞ் சந்தையுற வென்றுநா
னுன்னிருபாதம் பிடித்தேன்
ஈயா திருக்கத் தியாகராஜாப் பெயரு
மிசையுமோ வேன்புனைந்தாய்
ஈசனே சிவகாநேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமுஞ் சொல்வவோ வுன்மனங்கல்லோ
விரும்போ பெம்பாறையோ
இரு செவியுமந்த மோ கருமபல வந்தமோ
ஏழைபங்கின னல்லவோ
என்னன்னை மோக மோ யாரிட்ட சாபமோ
ஈதுனக் கழகுதானோ
இருபிள்ளை தாபமோ யார் மீதுகோபமோ
இனியுமுன்ற னை விடுவேனோ
உன்னையடுத்துங் கெஜவேனோ
ஒயாவி தென்குற்ற முன்குற்ற மொன்று மிலை
உற்றுப்பார் பெற்றவையா
ஈசனே சிவகாமி நேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே. 10


சனிராகு கேது புதன் சுக்கிரன் செவ்வாய்
குருச்சந்திரன் சூரியனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபன்னி ரெண்டையம்
சமமாய் நிறுத்தியுடனே
பனியொத்த நஷத்தி ரங்களிரு பத் தேழும்
பக்குவப் படுத்திப்பின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டி
பலரையும் அதட்டி என்முன்
கனிபோலவேபேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி
கர்த்தனின் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பணாக்கி இனியவள மருவுசிறு
மணைவைமுனி சாமியென
யாள்வதினி சாமியென
யாள்வதனி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்ப ஒளிவிளக்குத் திடீரென அணைந்த வேளையில் செய்வதறியாது திகைத்து நின்ற எமக்கு உடன் வந்து ஆறுதல் அளித்து எம் துயரில் பங்கு கொண்டது மட்டுமன்றி முன்னின்று உதவி செய்து ஓடியாடிக் கருமங்கள் நிகழ்த்தி மரணக் கிரியைகளிலும், இறுதியாத்திரையிலும் பங்கு கொண்டும், எமது தலைவரின் இழப்பு அறிந்து தொலைபேசி மூலம், தொலைநகல், தந்திகள் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், மலர்வளையங்கள் எம்பவற்றின் மூலம் எம் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், அந்தியேட்டி சபீண்டிகரண நிகழ்வுகளிலும் சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், மற்றும் இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த சங்கானை திருமொழி அச்சகத்தாருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.





இங்ஙனம்
குடும்பத்தினர்

வில்வளை,
மாதகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.

உ


சிவமயம்


# மாதகல் - நுணசை

# முருகமூர்த்தி கோவில் தேர் சிற்பங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org